Registrar of News Paper for India Regn. No. 15261/2005 (R.Dis no.1834/04) Date of Publication : 1st Week of Every Month 4 Pages


CVPA NEWS

A Monthly Newspaper (Tamil & English) for Video & Photographic Professionals

**சங்க உறுப்பினர்களே!
சங்கத்தில் தொடர்ந்து
ரினிவல் செய்து பயன்பெறுவீர்**

- CVPA

AN OFFICIAL NEWS MAGAZINE FROM CHENNAI VIDEO & PHOTOGRAPHER'S ASSOCIATION Film - 18 AUGUST 2022 Click - 05 Re. 1

# எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு மாபெரும் வெற்றியுடன் செயலாளர் பதவியை D.M. பிரேம்குமார் மீண்டும் தக்க வைத்துக் கொண்டார்




27.7.2022 அன்று எஸ்.வி.எஸ். கிளப்பில் தேர்தல் அதிகாரி லயன் விஜயகுமார் அவர்கள் புதிய நிர்வாகிகளுக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் முன்னாள் நிர்வாகிகள், தேர்தலில் போட்டியிட்டவர்கள் கலந்துகொண்டு புதிய நிர்வாகிகளுக்கு வாழ்த்து தெரிவித்தனர். சிறப்பு அழைப்பாளராக கௌரவ துணைத்தலைவர் கலைமாமணி யோகா அவர்கள் கலந்து கொண்டார்.

சென்னை வீடியோ மற்றும் புகைப்பட கலைஞர்கள் சங்கத்தின் 13 ஆவது பொதுத் தேர்தல் கடந்த மாதம் காஞ்சி ஹோட்டலில் வெகு சிறப்பாக நடைபெற்றது.இத் தேர்தலை லயன் திரு. ஆ. விஜயகுமார் அவர்கள் தலைமையில் விக்னேஷ்குமார், எழில் ஆனந்த் ஆகியோர் சிறப்பாக நடத்தினார்கள். தேர்தலில் வாக்களிக்க மொத்தம் 1813 சங்க உறுப்பினர்கள் தகுதி உள்ளவர்களாக (ரெனிவல் உறுப்பினர்கள் மட்டும்) அறிவிக்கப்பட்டு இருந்தனர். இதில் 1237 சங்க உறுப்பினர்கள் மட்டுமே வாக்களித்தனர். முதல் முறையாக தென் சென்னை தொகுதி, இரண்டு தொகுதிகளாக (S1,S2) பிரிக்கப்பட்டு தேர்தல் நடைபெற்றது. காலை 11:00 மணி அளவில் விறுவிறுப்புடன் தொடங்கிய தேர்தல், மாலை 5 மணியுடன் தேர்தல் அமைதியாக நடந்து முடிந்தது. அனைத்து பகுதியைச் சேர்ந்த உறுப்பினர்களும், அமைதியாக வரிசையில் நின்று வாக்களித்தார்கள். தென் சென்னை , மத்திய சென்னை , வட சென்னை, ஆகிய பகுதி உறுப்பினர்கள் வாக்களிப்பதற்கு வசதியாக தனித்தனியாக வரிசைகள் அமைக்கப்பட்டிருந்தன.

தொழிற்சங்க தேர்தலைப் போலவே முதல் முறையாக இரண்டு அணிகள் நேரடியாக போட்டி போட்டுக் கொண்டன. தேர்தல் நடைபெற்ற இடமான காஞ்சி ஹோட்டலில் கூடியிருந்த ஆயிரக்கணக்கான சங்க உறுப்பினர்களிடம், இரண்டு அணிகள் சார்பாகவும் நூற்றுக்கணக்கான ஆதரவாளர்கள் வாக்குகள் சேகரித்த வண்ணம் இருந்தனர். அசம்பாவித சம்பவங்கள் எதுவும் நடைபெறாமல் இருக்க காவல்துறையின் பாதுகாப்பும் போடப்பட்டிருந்தது.தமிழக அளவில் அனைத்து போட்டோ வீடியோ சங்கங்களும் சென்னை மாவட்ட சங்கத்தின் இந்த தேர்தலை மிகவும் ஆவலோடு எதிர்பார்த்து காத்திருந்தது .

மாலை 6 மணி அளவில் வாக்குச்சீட்டுகள் எண்ணப்பட்டன. ஆரம்பம் முதல் இறுதி வரை (ஒரு சிலரைத் தவிர) பிரேம்குமார் தலைமையில் போட்டியிட்டவர்களே இதில் முன்னிலை வகித்தார்கள்.

பிரேம்குமார் நமது சங்கத்தில் ஏற்கனவே செயலாளர் பதவி உட்பட பல்வேறு முக்கிய பொறுப்புகளில் இருந்தவர் என்பது அனைவரும் அறிந்ததே. இவர் செயலாளர் பதவி வகித்த காலத்தில்தான் சங்க ரெனிவல் உட்பட இன்சூரன்ஸ் போன்ற விஷயங்கள் அதிரடியாக மாற்றம் செய்யப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. சங்க செயல்பாடுகளில் இவரது ஆர்வம் உறுப்பினர்களுக்கு எப்போதும் ஆதரவாகவே இருக்கும். எனவே தனது செயல்பாடுகளில் மிகவும் கண்டிப்புடன் நடந்துகொள்வார். இதுவே இவருக்கு பல சமயம் எதிராக அமைந்துள்ளது. அதிகம் பேச ாமல் இருந்து, தொலைநோக்குப் பார்வையுடன், சங்க உறுப்பினர்கள் பயன் பெறும் வகையில் திட்டங்கள் தீட்டி சங்கத்தை நல்வழியில் நடத்தி செல்வதில் அதிக ஆர்வம் கொண்டவர். ஆரம்பகால உறுப்பினரான இவர் 2002ல் புரசை பகுதி செயலாளராக தனது சங்கப் பணியை தொடங்கினார். 2004ல் இணைச் செயலாளராகவும், 2006ம் ஆண்டு முதல் 2012ம் ஆண்டு வரை மிகச் சிறப்பாக பிஆர்ஓ பணியை செய்து அனைவரிடமும் பாராட்டை பெற்றார். 2012ல் நமது சங்கத்தில் அன்று செயலாளர் பதவியில் கோலோச்சியிருந்த E.ரவிச்சந்திரனை எதிர்த்து போட்டிட்டு வெற்றி வாகை சூடினார். அதன்பிறகு நடைபெற்ற தேர்தலில் வெற்றி வாய்ப்பை இழந்தார். எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் சங்க செயலாளர் பதவியை தக்க வைத்துக் கொண்டுள்ளது அனைவரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

செல்.செல்வம் என்று உறுப்பினர்களால் அடை மொழியோடு அழைக்கப்படும் செல்வம் அவர்கள் 2008ல் தி.நகர் பகுதி செயலாளராக தனது சங்கப் பணியை தொடங்கினார். 2012 முதல் 2016 வரை பொருளாளராக இருந்தார். ஏற்கனவேதலைவர்பதவிக்குபோட்டியிட்டாலும் இம்முறை நடைபெற்ற தேர்தலில் நான்கு முனை போட்டியில் சங்க தலைவர் பதவியில் நின்று வெற்றி வாகை சூடிய இவரது வெற்றியை இளம் கலைஞர்கள் கொண்டாடி மகிழ்ந்தனர்.

ஆரம்பகால சங்க உறுப்பினரான ஜெயபால் அவர்கள் 2002 முதல் 2006 வரை ராயபுரம் பகுதி செயலாளராக தனது சங்கப் பணியை தொடங்கினார். 2006 முதல் 2014வரை வடசென்னை தொகுதி இணைச் செயலாளராகவும், 2014ல் துணைத் தலைவராகவும் இருந்து வடசென்னை கலைஞர்களின் நல் மதிப்பை பெற்றவர். இரண்டு முறை பொருளாளர் பதவிக்கு போட்டியிட்டு வெற்றி வாய்ப்பை இழந்த இவர் இம்முறை பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் தனது வெற்றியை உறுதி செய்து கொண்டார்.

2016-ல் தென் சென்னை பகுதி இணைச் செயலாளராக தனது சங்கப் பணியை ரவிக்குமார் தொடங்கினார். 2018 முதல் 2022 வரை நிதி நெருக்கடியான கொரோனா காலத்தில் பொருளாளராக செயல்பட்டார். இம்முறை பிஆர்ஓ பதவிக்கு போட்டியிட்டு மீண்டும் ஒரு வெற்றியை தன் வசமாக்கிக் கொண்டார்.

| ஆண்டு | மொத்த ஓட்டு | பதிவான ஓட்டு |
|---|---|---|
| 2006 | 825 | 476 |
| 2008 | 1260 | 783 |
| 2010 | 1719 | 1150 |
| 2012 | 1950 | 1366 |
| 2014 | 850 | 412 |
| 2016 | 1508 | 911 |
| 2018 | 1863 | 1287 |
| 2022 | 1813 | 1237 |



செயற்குழுவில் இடைநீக்கம் செய்யப்பட்ட திரு.விஜயகுமார், திரு.ஸ்டீபன், திரு.கோபி, திரு. பாபு ஆகியோர் மீது விதிக்கப்பட்ட இடை நீக்கம் விலக்கிக் கொண்ட பிறகு தேர்தலில் இந்த நால்வரும் வாக்களித்தனர்.

# வாக்குகள்

| | |
|---|---|
| மொத்த ஓட்டு | **1813** |
| பதிவான ஓட்டு | **1237** |

**தலைவர் பதவிக்கு போட்டியிட்டவர்கள் பெற்ற வாக்குகள்**

| | |
|---|---|
| S. செல்வம் @ செல் செல்வம் | 475 |
| V. உமாபதி | 350 |
| R. கார்மல் நேவிஷ்குமார் @ நேவி | 243 |
| M.வெங்கடாஜலபதி | 143 |
| செல்லாதவை | 28 |
| | ------ |
| | **1237** |

**செயலாளர் பதவிக்கு போட்டியிட்டவர்கள் பெற்ற வாக்குகள்**

| | |
|---|---|
| D.M. பிரேம்குமார் | 695 |
| V. புருஷோத்தமன் | 535 |
| செல்லாதவை | 7 |
| | ------ |
| | **1237** |

**பொருளாளர் பதவிக்கு போட்டியிட்டவர்கள் பெற்ற வாக்குகள்**

| | |
|---|---|
| K. ஜெயபால் | 727 |
| N. எத்திராஜ் | 479 |
| செல்லாதவை | 31 |
| | ------ |
| | **1237** |

**பிஆர்ஓ பதவிக்கு போட்டியிட்டவர்கள் பெற்ற வாக்குகள்**

| | |
|---|---|
| N. ரவிக்குமார் | 693 |
| A. பெரோஸ்கான் | 522 |
| செல்லாதவை | 22 |
| | ------ |
| | **1237** |

**வடசென்னை துணைத்தலைவர் பதவிக்கு போட்டியிட்டவர்கள் பெற்ற வாக்குகள்**

| | |
|---|---|
| A. கவுஸ்பாஷா | 202 |
| N. சுரேஷ்பாபு | 168 |
| செல்லாதவை | 31 |
| | ------ |
| | **375** |

**வடசென்னை இணைச் செயலாளர் பதவிக்கு போட்டியிட்டவர்கள் பெற்ற வாக்குகள்**

| | |
|---|---|
| P. பிரபாகரன் | 197 |
| P. செந்தில் முருகன் | 175 |
| செல்லாதவை | 6 |
| | ----- |
| | **378** |

**மத்திய சென்னை துணைத் தலைவர் பதவிக்கு போட்டியிட்டவர்கள் பெற்ற வாக்குகள்**

| | |
|---|---|
| M. வேல்முருகன் | 162 |
| P. தேவானந்த் | 130 |
| செல்லாதவை | 5 |
| | ------ |
| | **297** |

**மத்திய சென்னை இணைச் செயலாளர் பதவிக்கு போட்டியிட்டவர்கள் பெற்ற வாக்குகள்**

| | |
|---|---|
| R. தனக்கோட்டி | 184 |
| P. மண்ணையா | 106 |
| செல்லாதவை | 4 |
| | ----- |
| | **294** |

**தென் சென்னை (S1) இணைச்செயலாளர் பதவிக்கு போட்டியிட்டவர்கள் பெற்ற வாக்குகள்**

| | |
|---|---|
| T. செந்தில்குமார் | 150 |
| R. கண்ணன் | 114 |
| செல்லாதவை | 6 |
| | ------ |
| | **277** |

# சிறப்பான ஏற்பாடுகளுடன் CVPA 25 வது பொதுக்குழுக் கூட்டம்



கொரோனா காலத்தால் தடைபட்டு போயிருந்த CVPAவின் 25ஆவது பொதுக்குழு மற்றும் 13வது பொதுத்தேர்தல் ஆகியவை, கடந்த மாதம் சென்னை காஞ்சி ஹோட்டலில் நடைபெற்றது. பொதுக்குழு கூட்டத்தை நமது சங்க தலைவர் எஸ். சரவணன் அவர்கள் தலைமையேற்று நடத்திக் கொடுத்தார். நிகழ்ச்சியின் தொடக்கமாக சங்கத்தின் முன்னாள் தலைவர் திரு. சுந்தரவடிவேலு , திரு. ஸ்ரீதர் , முன்னாள் செயலாளர் திரு. பிரேம்குமார், ஆகியோர் சிறப்புரையாற்றிய பின், 25 ஆண்டு காலமாக நமது சங்க செயல் பாட்டுடன் இணைந்து 13 தேர்தலை சிறப்பாக நடத்தி கொடுத்த லயன் திரு. விஜயகுமார் மற்றும் விக்னேஷ் திரு. குமார் ஆகியோர் பொதுக்குழு முன் கௌரவப்படுத்தி அவர்களுக்கு பாராட்டு பத்திரம் வழங்கப்பட்டது. அதன் பின் 2019,2020,2021 ஆம் ஆண்டிற்கான செயலாளர் அறிக்கையை நமது சங்க செயலாளர் திரு. துரைபாபு வாசித்தார். இவரைத் தொடர்ந்து இதே ஆண்டுகளுக்கான கண க்கறிக்கையை சங்க பொருளாளர் திரு. ரவிக்குமார் சமர்ப்பித்தார். இந்த இரண்டு அறிக்கை களும் பொதுக்குழு உறுப்பினர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏக மனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பின்னர் இக்கூட்டத்தில் சங்க உறுப்பினர்கள் வழங்கிய ஆலோச னைகளும் அறிவுரைகளும் ஏற்றுக் கொள்ளப்பட்டன. அதன்படி ஏற்றப்பட்ட முக்கிய தீர்மானங்கள் பின்வருமாறு:

முன்னாள் பொருளாளர் திரு. விஜயகுமார், திரு. ஸ்டீபன், திரு .கோபி, திரு. பாபு, ஆகியோர் சங்கத்திற்கு எதிராக செயல்பட்ட காரணத்தால் பொதுக்குழு வரை இடை நீக்கம் செய்யப்பட்டு இருந்தனர். இவர்கள் சார்பாக திரு. விஜயகுமார் செய்த தவறுக்கு பொதுக்குழுவில் மன்னிப்பு கேட்டுக் கொண்டதன் அடிப்படையில், இவர்கள் நால்வர் மீதும் விதிக்கப்பட்ட இடைநீக்கம் விளக்கிக் கொள்ளப்பட்டு தேர்தலில் வாக்களிக்கவும் அனுமதித்து பொதுக்குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தேர்தலில் தேர்ந்தெடுக்கப்படும் நிர்வாகிகள் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் அதிகமாக கூட்டங்களில் கலந்து கொள்வதில்லை என்ற ஒரு கருத்து நிலவுகிறது. இதை தடுக்கும் விதமாக, வரும் தேர்தலில் 70 சதவீத சங்க செயற்குழு கூட்டங்களில் கலந்து கொண்டு வருகை பதிவேட்டில் பதிவு செய்தவர்கள் மட்டுமே தேர்தலில் போட்டியிட அனுமதிக்க வேண்டுமென்று பொதுக் குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சங்கத்தில் கடன் பாக்கி தொகை அதிகரித்துள்ளது. கடன் பாக்கி வைத்திருப்பவர்களை விரைவில் கண்டறிந்து, உடனடியாக பணத்தை வசூலித்து கடன் பிரச்சனைக்கு தீர்வு கொண்டு வர, கணக்கு சீர்திருத்தக் குழுவை உடனடியாக அமைத்து அந்த குழுவின் ஆலோசனைகளை நிர்வாகம் மற்றும் செயற்குழு ஏற்று செயல்படவும் இந்த பொதுக்குழு ஒப்புதல் அளிக்கிறது என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. டிரஸ்டை மறு சீரமைப்பு செய்து மீண்டும் புதுப்பொலிவுடன் தொடர்ந்து செயல்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப் பட்டது.

இன்று நடைபெறும் தேர்தலுக்குப் பிறகு சங்கத்தின் வரவு செலவு கணக்குகளை புதிய நிர்வாகம் பதவியேற்றுக்கொண்டவுடன் அவர்கள் வசம் ஒப்படைக்க தீர்மானம் கொண்டுவரப்பட்டது. அனைத்து தீர்மானங்களும் நிறைவேற்றிய பிறகு நன்றியுரைடன் பொதுக்குழு நிறைவு பெற்றது.

**தென் சென்னை (S2) இணைச்செயலாளர் பதவிக்கு போட்டியிட்டவர்கள் பெற்ற வாக்குகள்**

| | |
|---|---|
| E. சக்தி | 170 |
| G. திலீப் குமார் | 104 |
| செல்லாதவை | 3 |
| | ------ |
| | **277** |

## பகுதி செயலாளர்

**கொடுங்கையூர் பகுதி**

| | |
|---|---|
| K. ரமேஷ் | 19 |
| M. அழகு மாரி | 17 |
| | ----- |
| | **36** |

**அயன்புரம்**

| | |
|---|---|
| G. ரகுநாத் பாபு | 31 |
| A. மேக்ஸ்வெல் | 10 |
| | ------ |
| | **41** |

**விருகம்பாக்கம்**

| | |
|---|---|
| M. ரமேஷ் யாதவ் | 18 |
| G. சிவகுமார் | 6 |
| | ----- |
| | **24** |

# 2022-2024ம் ஆண்டுகளுக்கான CVPA நிர்வாகிகள் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள்



| செல். செல்வம் @ S.செல்வம் | D.M. பிரேம்குமார் | K. ஜெயபால் | N. ரவிக்குமார் |
|---|---|---|---|
| தலைவர் | செயலாளர் | பொருளாளர் | PRO |
| 9941867744 | 9884002779 | 9381090329 | 9841272071 |

## துணைத் தலைவர்கள்



R. சீனிவாசன் (S1) 9840127491

K. ஜெயகுமார் (S2) 9171465051

M. வேல்முருகன் (Central) 9884184548

A. கௌஸ்பாஷா (North) 9840121525

## இணைச் செயலாளர்கள்



T. செந்தில்குமார் (S1) 8144655506

E. சக்தி (S2) 9094880066

R. தனக்கோட்டி (Central) 9841327387

P. பிரபாகர் (North) 9282117785

## தென் சென்னை பகுதி செயலாளர்கள் (S1)



| T.M. ரவி @சங்கர் | P. நரசிம்மன் | J. வீரபாண்டியன் | V. திருமலை | S. மோகன் | M. ரமேஷ்யாதவ் |
|---|---|---|---|---|---|
| தேனாம்பேட்டை | மேற்குமாம்பலம் | சைதாப்பேட்டை | கே.கே.நகர் | கோடம்பாக்கம் | விருகம்பாக்கம் |
| 9710282858 | 9841255629 | 9791154623 | 7418360231 | 9841198089 | 9884422856 |

## தென் சென்னை பகுதி செயலாளர்கள் (S2)



| D. முரளி | P. ஹரிஹரன் | M. பேஸ்லிக்கா அந்தோணி | C. பழனி பால்ராஜ் | J. ராதாகிருஷ்ணன் | V. விஜயராஜா | L. ஜான் ஸ்டீபன் | E. விஜயகுமார் | R. பாபுஜி |
|---|---|---|---|---|---|---|---|---|
| மந்தைவெளி | மயிலாப்பூர் | திருவான்மியூர் | சோளிங்கநல்லூர் | வேளச்சேரி | மடிப்பாக்கம் | பல்லாவரம் | குரோம்பேட்டை | தாம்பரம் |
| 9884431506 | 9884411565 | 9840131790 | 8754473539 | 9445248788 | 9382761974 | 9884574574 | 9841417716 | 9841918424 |

## மத்திய சென்னை பகுதி செயலாளர்கள்



| M. ஸ்ரீதரன் | D. விஜயகிருஷ்ணன் | R. திலீப்குமார் | R. சதீஷ் | K. சண்முகம் | K. கணேஷ் | G. ரகுநாத் பாபு |
|---|---|---|---|---|---|---|
| அண்ணா நகர் | நுங்கம்பாக்கம் | பட்டாளம் | சூளை | ஆயிரம் விளக்கு | திருவல்லிக்கேணி | அயனாவரம் |
| 9444325145 | 9841093957 | 9841300226 | 9444748606 | 9841013360 | 9840233712 | 9444113871 |

## வடசென்னை பகுதி செயலாளர்கள்



| R. ரவிக்குமார் | R. ரிஸ்வான் | D. பாபு | S. மதிவாணன் | A. இளங்கோவன் | K. விஜய் | N. பச்சையப்பன் | A. மேகநாதன் | K. ஹரிகுமார் | K. ரமேஷ் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| வண்ணாரப்பேட்டை | ரெட்ஹில்ஸ் | அம்பத்தூர் | எண்ணூர் | கொளத்தூர் | பெரம்பூர் | தண்டையார்பேட்டை | திருவொற்றியூர் | சௌகார்பேட்டை | கொடுங்கையூர் |
| 9841947770 | 9841253449 | 9940255560 | 9884111155 | 9841199809 | 9444292035 | 9840660710 | 9176600246 | 9840128284 | 9841117057 |



நடந்து முடிந்த CVPAவின் தேர்தலில் வெற்றி பெற்ற சங்க நிர்வாகிகளுக்கு, சென்னை அயனாவரம் பகுதியை சேர்ந்த CVPA உறுப்பினர்கள் சார்பாக பாராட்டு விழா ஏற்பாடு செய்யப்பட்டது. இந்நிகழ்ச்சியில் CVPA தலைவர் S. செல் செல்வம், செயலாளர் D. M. பிரேம்குமார், பொருளாளர் K. ஜெயபால், PRO. N. ரவிக்குமார், மத்திய சென்னை துணைத் தலைவர் M. வேல்முருகன், மத்திய சென்னை இணைச் செயலாளர் R. தனக்கோடி அயனாவரம் பகுதி செயலாளர் G. ரகுநாத்பாபு ஆகியோர் கலந்து கொண்டனர்.



தென் சென்னை S2 பகுதியைச் சேர்ந்த திருவான்மியூர் பகுதி செயலாளர் பெஸ்லிக்கா அந்தோணி, வேளச்சேரி பகுதி செயலாளர் ராதாகிருஷ்ணன், சோழிங்கநல்லூர் பகுதி செயலாளர் பழனி பால்ராஜ் ஆகியோர் இணைந்து ,தென் சென்னை பகுதி உறுப்பினர்களுக்கு, CVPA நிர்வாகிகளை அறிமுகப்படுத்தும் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தனர். தலைவர் S. செல். செல்வம், செயலாளர் D.M. பிரேம்குமார், பொருளாளர் K. ஜெயபால், பிஆர்ஓ. N. ரவிக்குமார் துணைத் தலைவர் ஜெயக்குமார், இணைச்செயலாளர் சக்தி ஆகியோர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில் கலந்து கொண்ட உறுப்பினர்கள் அனைவரும் பயன்பெறும் வண்ணம் அவர்களுக்காக, ஈடியெஸ் எடிட்டிங் பயிற்சி வகுப்பு நடைபெற்றது.



தென் சென்னை S2 பகுதியைச் சேர்ந்த மடிப்பாக்கம் பகுதி உறுப்பினர்களுக்கு, புதிய நிர்வாகிகள் மற்றும் புதிய செயற்குழு உறுப்பினர்கள் சார்பாக நன்றி அறிவிப்பு கூட்டம் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டது. இந்நிகழ்ச்சியில் நமது சங்கத் தலைவர் செல். செல்வம் , செயலாளர் DM. பிரேம்குமார் பொருளாளர் K. ஜெயபால் PRO. N. ரவிக்குமார் துணைத் தலைவர் ஜெயக்குமார், இணைச் செயலாளர், சக்தி, மற்றும் மடிப்பாக்கம் பகுதி செயலாளர். V.விஜயராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

## மறைந்த நமது சங்க ஆயுட் கால உறுப்பினர் பி.கே.ராஜா குடும்பத்திற்கு சங்கம் சார்பாக 20 ஆயிரம் ரூபாய் ஈம சடங்கு தொகை வழங்கப்பட்டது!



சென்னை சூளை பகுதியைச் சேர்ந்த நமது சங்க ஆயுட்கால உறுப்பினர் பி.கே. ராஜா உடல் நல குறைவின் காரணமாக கடந்த மாதம் இயற்கை எய்தினார். புதிய நிர்வாகிகள் அவருடைய குடும்பத்திற்கு நமது சங்கம் சார்பாக வழங்கப்படும் ஈமச்சடங்கு தொகை ரூபாய் 20 ஆயிரத்தை அவருடைய குடும்பத்தினரிடம் வழங்கி, அன்னாருக்கு இறுதி அஞ்சலி செலுத்தினார்கள்.

## மறைந்த நமது சங்க உறுப்பினர் பிரகாஷ் குமார் குடும்பத்திற்கு 20 ஆயிரம் ரூபாய் ஈம சடங்கு தொகை வழங்கப்பட்டது!



சென்னை வண்ணாரப்பேட்டை பகுதியைச் சேர்ந்த நமது சங்க உறுப்பினர் பிரகாஷ் குமார் உடல் நல குறைவின் காரணமாக கடந்த மாதம் இயற்கை எய்தினார். புதிய நிர்வாகிகள் அவருடைய குடும்பத்திற்கு நமது சங்கம் சார்பாக வழங்கப்படும் ஈமச்சடங்கு தொகை ரூபாய் 20 ஆயிரத்தை அவருடைய குடும்பத்தினரிடம் வழங்கி, அன்னாருக்கு இறுதி அஞ்சலி செலுத்தினார்கள்.



வண்ணாரப்பேட்டை பகுதியின் சங்கத்தின் உறுப்பினர் ராஜலிங்கம் அவர்களுடைய இல்ல நிகழ்ச்சியில் சங்க துணைத் தலைவர் கௌஸ் பாஷா, முன்னாள் செயலாளர் துரைபாபு ஏனைய முன்னாள் நிர்வாகிகளுடன் கலந்து கொண்டார்கள்




புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்ட CVPA நிர்வாகிகள் கூடலூரில் நடைபெற்ற மாநில சங்க செயற்குழுவில் கலந்து கொண்டார்கள். அப்போது மாநில சங்க துணைத் தலைவர் சரவணன் அவர்களை புதிய நிர்வாகம் சார்பாக பொன்னாடை அணிவித்து வாழ்த்தினார்கள்.

**CVPA NEWS** (Tamil & English ) Monthly Newspaper,
RNI No. TNBIL / 2005 / 15261 (R.Dis no.1834/04)
Published by **B.SRIDAR,** on behalf of
**Chennai Video & Photographers' Association,**
at 51/24, Bangaru Street, Ellis Road, Chennai-2. Ph: 2860 7821
Email : cvpanews2005@gmail.com, Website : www.cvpa.in
Printed by **M.NAVANEETHAN,** at **Nava Jothi Achagam,**
No.8. Muktharunnissa Begum St, Ellis road, Chennai-2.
Editor : **B.SRIDAR,** Mobile: 8015170351
If undelivered please return to
**Chennai Video & Photographers' Association,**
**at 51/24, Bangaru Street, Ellis Road, Chennai-2. Ph: 28607821**

Postal Registration no TN/ARD/11/2021-2023 WPP License No: TN/PMG/CCR/WPP 557/2021-2023
Posted at Egmore RMS/I (Partika Channel) Posted on 13.08.2022

To